ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2143/53 - 2019 ඔක්තෝම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2019.10.04
2143/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2013, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 1796/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட, காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2012/LRB/16.
காண் எடுத்தல் உத்தியோகத்தரின் இல. : WRSWD&EIP/ACQ/KB/04.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகத மெதுர”
1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019,யூலை 18.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535 டி திவுலபிட்டிய கிரம அலுவலர் பிரிவின் திவுலபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.10.21 ஆந் திகதிய 9568 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டுகள் :

01. **துண்டு இல.15 - பழைய கெஸ்பேவ வீதயின் வரி மதிப்பீட்டு இலக்கம் 89 ஐக் கொண்ட காணி - விஸ்தீரணம்: 0.0316 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 89, வீதி மற்றும் கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு 89ஐக் கொண்ட காணி; கிழக்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 89ஐக் கொண்ட காணி; தெற்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 87A ஐக் கொண்ட காணி துண்டு 16, 92,91 மற்றும் 90; மேற்கு : துண்டு இல.92, 91 மற்றும் 90.

02. **துண்டு இல.16 - பழைய கெஸ்பேவ வீதயின் வரி மதிப்பீட்டு இலக்கம் 87A ஐத் கொண்ட காணி - விஸ்தீரணம்: 0.0141 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல.15, பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு 89, 87Aஐக் கொண்ட காணி; கிழக்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 87A ஐக் கொண்ட காணி; தெற்கு: துண்டு இல. 94, 93, 91 மற்றும் 92; மேற்கு: துண்டு இல.92 மற்றும் 15.

10- 649